# அப்துல் கலாமின் அக்னிச்சிறகுகள்: தன் வரலாற்றுப் பார்வை

ப.தா. அன்பு ஹன்னா டோரா
இணைப்பேராசிரியர், பிரெஞ்சு துறை, திருச்சிலுவை கல்லூரி,
நாகர்கோவில் - 629 004, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

நம் தாய்மொழி தமிழ்மொழி தொன்மையானதும் இரண்டாயிரம் ஆண்டு கால இலக்கிய பாரம்பரிய தொடர்ச்சி உடையதுமாகும். இவ்விலக்கிய பாரம்பரியத்தில் தனிநபரின் வாழ்வியல் அனுபவங்களும் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளன. இதன் தொடர்ச்சி ஒரு கட்டத்தில் தமிழ் இலக்கிய மரபில் முழு நிறைவடைந்த வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் வழி முன்னுதாரணமான வாழ்வியல் சிந்தனைகளையும் அது எழுதப்பட்ட காலத்தின் சமூகச் சூழலையும் அறிந்து கொள்ள உதவுகிறது. வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் வழி தனிநபரின் வாழ்க்கையிலிருந்து நாம் பெறக்கூடிய கருத்துக்கள் மட்டுமல்லாமல் அவர் சார்ந்த துறையின் அறிவையும் நாம் பெறமுடிகிறது. இக்கட்டுரை இந்திய இளைஞர்களுக்கு முன்மாதிரியாக கருதப்படும் டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் அவர்களின் தன் வரலாற்று நூலான 'அக்னிச் சிறகுகள்' நூலினை ஆராயும் விதமாக அமைகிறது.

## வாழ்க்கை வரலாறு - சொற்பொருள் விளக்கம்

'வாழ்க்கை வரலாறு' என்ற சொற்கூட்டு 'BIOGRAPHY' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையானது. வாழ்க்கை என்ற சொல் 'வாழ்நாளை' குறிக்கிறது. வரலாறு என்பது நிகழ்ச்சி முறை, சர்வ சரித்திரம், விவரம், உதாரணம் என்று தமிழ் அகராதிகள் கூறுகின்றன. தமிழில் வாழ்க்கை வரலாறு என்ற சொல் வழக்கு குறுகிய காலத்திலேயே நடைமுறைக்கு வந்தது. ஆனால் அதே பொருளில் பல்வேறு சொற்கள் பயன்பாட்டில் இருந்து வந்திருக்கின்றன. அவை வரலாறு, சரிதை, சரிதம், சரித்திரம், வாழ்வு, வாழ்க்கை, வாழ்க்கைக்குறிப்புகள், வாழ்க்கைக் காவியம், விளக்கம், வைபவம், கதை, அனுபவங்கள், விஜயம், சிந்தாமணி, ஜீவியம், லீலை, தரிசனம், நினைவுகள், நிகழ்ச்சிகள், புராணம் போன்ற சொற்களாலும் தொடர்களாலும் குறிப்பிடப்படுகின்றன'.

"வாழ்க்கை வரலாற்றிலக்கியம் என்பது பற்றி பல்வேறு அறிஞர்கள் கருத்துரைத்து உள்ளனர். உண்மை நிகழ்ச்சிகளையும் அவைகளின் புதிய வடிவங்களையும் கொண்டு மனிதாபிமான நோக்கோடு கோத்து அமைக்கப்படும் ஒரு தனிமனிதக் கதையே வாழ்க்கை வரலாற்று இலக்கியம்"[2] என்கிறார் சாலினி இளந்திரையன். "ஒருவர் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் அனைத்தையும் அவற்றின் சிறப்புத் தெளிவாகப் புலப்படும் படியும் காலக்குறிப்புகளுக்குப் பெருமையளித்தும் உண்மைக்கு முதன்மையளித்தும் கோவைப்படுத்தி இலக்கிய நயம்பட உரைக்க வேண்டும். அக்காலை அவற்றினூடே வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் பண்பு மிளிரும் படியும் செயல்கள் விளக்கம் பெறும்படியும் படைக்க வேண்டும்"[3] என்று ச.சிவகாமி விளக்கமளிக்கிறார்.

## தமிழில் வாழ்க்கை வரலாற்று இலக்கியம்

தனி ஒருவரின் வாழ்வியல் நிகழ்வுகளை வெளிப்படுத்துதல் என்பது காலம் காலமாக நடந்து வரும் தொன்று தொட்டு வரும் மரபாகும். தமிழில் பல்வேறு புலவர்கள், மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், வேளிர்கள் ஆகியோரின் வாழ்க்கைப் பதிவுகளை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. சங்க இலக்கியம் முதற்கொண்டு நிகழ்காலம் வரை இச்செயல்முறையைக்



1

காணமுடிகிறது. ஆனால் அவற்றில் முழுமையான உருவ-உள்ளடக்கத்தையுடைய வாழ்க்கை வரலாற்றை உடையனவல்ல. தமிழில் முழுமையான முதன்மையான வாழ்க்கை வரலாற்றிலக்கியமாக 1868 இல் சோமசுந்தர அடியவர் எழுதிய 'அச்சுதானந்த சுவாமிகள் வரலாறு' என்ற நூல் அமைகிறது. ஆனால் ஜே.ஏ.கதிர்வேலுப்பிள்ளை படைத்த 'லார்ட் கிளைவ் சரித்திரம்' எனும் நூலை முதலாவதாக கூறுவோரும் உண்டு. அச்சுதானந்த சுவாமிகள் வரலாறு செய்யுள் வடிவில் அமைந்ததாகும். வண்ணசரபம் தண்டபாணி சுவாமிகளின் தன் வரலாற்று நூலான 'குருபர தத்துவ நூலும்', கிறித்தவக் கம்பர் எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை 1893 இல் எழுதிய 'பாளையங்கோட்டை எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை கிறிஸ்தவரான வரலாறு' என்னும் நூலும் தன் வரலாற்று நூல்களில் முதன்மையானதாகும்.

### வாழ்க்கை வரலாற்று வகையும் அப்துல் கலாமின் வரலாறும்

பொதுவாக வாழ்க்கை வரலாற்று இலக்கியம் அதன் படைப்பாளரின் இயல்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு என இரு வகையாக பிரிப்பர். ஆனால் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தை வாழ்க்கை வரலாற்றுத் தலைவரை அடிப்படையாகக் கொண்டு முனைவர் ச.சிவகாமி அவர்கள் கீழ்க்கண்டவாறு ஏழு வகையாகப் பகுத்துள்ளார்.

1. புலமையாளர் பற்றியன (படைப்பாளர் மற்றும் திறனாய்வாளர் உட்பட)
2. அரசியல் தலைவரைச் சுட்டுவன
3. சமுதாயத் தொண்டரைக் குறிப்பன
4. தொழில் வல்லுநரை வரைவன
5. அறிவியல் அறிஞரை அறிவிப்பன
6. சமயச்செல்வரைச் சார்ந்தன
7. கலைஞரைக் காட்டுவன'

மேற்கூறியவற்றை நோக்கின் அப்துல் கலாமின் 'அக்னிச் சிறகுகள்' நூல் தன் வாழ்க்கை வரலாற்று வகையிலும் அறிவியல் அறிஞரை அறிவிப்பன என்ற பிரிவிலும் அடங்குகிறது. பொதுவாக தன் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் அக்கதையின் நாயகனாலேயே எழுதப்படும். ஆனால் அக்னிச் சிறகுகள் நூல் இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அப்துல் கலாம் அவர்கள் சம்பவங்களை விவரிக்க அவருடைய நண்பர் அருண் திவாரியால் தொகுக்கப்பட்டது. எனவே இந்நூல் ஒரு புது வகையினதாக விளங்குகிறது.

### அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், இந்தியாவின் 11வது குடியரசு தலைவர், இந்திய ஏவுகணை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, அற்புதமான பேச்சாளர், இந்திய இளைஞர்களின் கனவு நாயகர் டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் அவர்களைப் பற்றி பல வாழ்க்கை வரலாற்று நூல்கள் வெளிவந்துள்ளன. தன் வரலாற்று நூல்களாக மூன்று வெளிவந்துள்ளன.

### தன் வரலாற்று நூல்கள்

1. அக்னிச் சிறகுகள் - டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம், அருண் திவாரி
2. திருப்பு முனைகள்: சவால்களுக்கு இடையே ஒரு பயணம் - டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்
3. எனது பயணம்: கனவுகளிலிருந்து செயலுக்கு மாறிச் செல்லுதல் - டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்

### டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாமின் 'அக்னிச் சிறகுகள்'

டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாமின் தன் வாழ்க்கை வரலாற்று நூல் 'அக்னிச் சிறகுகள்' ஆகும். இந்நூலினை டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாமும் அவர்கள் தன் வாழ்வியல் சம்பவங்களை விவரிக்க அவருடைய பணி சார்ந்த நண்பர் அருண் திவாரி என்பவரால் ஆங்கிலத்தில் தொகுக்கப்பட்டது. இந்நூலானது தமிழ் மட்டுமில்லாமல் தெலுங்கு, குஜராத்தி, மலையாளம், ஒரியா, மராத்தி, சீனம்

உள்ளிட்ட 13 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. தமிழில் மு.சிவலிங்கம் மொழி பெயர்த்துள்ளார். இந்நூலிலுள்ள கவிதைகளை கவிஞர் புவியரசு தமிழாக்கம் செய்துள்ளார். தமிழ்நாட்டைச் சார்ந்த தமிழ்மொழியில் கவிதை எழுதும் ஆளுமை நிறைந்தவரான கலாம் அவர்கள், தமிழில் தன் வாழ்க்கை வரலாற்றை தமிழில் வெளியிடாமல் ஆங்கிலத்தில் வெளியிட்டது ஏன்? என்று வாசகனுக்கு எழும் வினாவை தானே எழுப்பி, "கடந்த 50 ஆண்டுகளாக படித்தது, பணி செய்தது, பணி செய்து கொண்டிருப்பது, எல்லாவற்றிலும் ஆங்கில மொழி நுழைந்து விட்டது. இதனால் சுய சரித ஆதாரங்கள் பல குறைந்த நேரத்தில் ஆங்கிலத்தில் உருவாக்கும் நிலை ஏற்பட்டது. என் இந்தி நண்பர் அருண் திவாரி என்னுடைய சுய சரிதத்தை நான் புத்தகமாக்க என்னுடன் ஆங்கிலம் மூலம் ஒத்துழைக்க முடிந்தது" என்று தன் வாழ்க்கை வரலாறு எழுதப்பட்ட சூழலை விளக்குகிறார்.

### உருவமும் உள்ளடக்கமும்

இந்நூலானது, ஏழு பிரிவுகளாகவும் 16 உட்பிரிவுகளாகவும் ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு பொருண்மை அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. அவை 1. முன்னுரை 2.அறிமுகம் 3.முனைதல் 4.படைத்தல் 5.அமைதிப்படுத்துதல் 6.தியானம் 7.நிறைவுரை என்பன.

### இளமையும் கல்வியும்

தமிழ்நாட்டில் இராமேஸ்வரம் தீவில் ஜெயினுல்லாபுதீன் - ஆஷியம்மா இணையருக்கு மகனாகப் பிறந்தவர் அப்துல் கலாம் அவர்கள். சிறுவனாக இருந்த போதே குடும்பத்தில் நிலையறிந்து புளியங்கொட்டை பொறுக்கி விற்றல், செய்தித்தாள்களை விநியோகித்தல், போன்ற பணிகளை செய்தவர். ஜலாலுதீன், சம்சுதீன் போன்றவர்களால் அன்பால் ஈர்க்கப்பட்டு சிறப்பு இயல்புகளுடனும் வளர்க்கப்பட்டவர். தனது தந்தை போன்றே சமூகத்துடன் மத நல்லிணக்கத்துடன் இணங்கிப் போவதிலும் ஒற்றுமையுடன் இருப்பதிலும் பிடிப்பு கொண்டவர். கலாமின் தந்தைக்கும் ராமேஸ்வர தலைமை குருக்கள் லட்சுமண சாஸ்திரிகளுக்குமான நட்பிலும் அவரின் மகன் ராமநாத சாஸ்திரி-கலாம் நட்பிலும் இதனைக் காணலாம். மேலும் அப்துல் கலாமின் மற்ற இளம் பருவ நண்பர்களான அரவிந்தன், சிவப்பிரகாசன் இந்து பிராமணக் குடும்பத்தினராக இருப்பதையும் காணமுடிகிறது. பின் நாட்களில் இதனை நினைவுகூறும் அப்துல்கலாம் மேற்படிப்பு படிக்கப் போன இடங்களில் இந்நல்லிணக்கத்தைக் காணமுடியவில்லை என்கிறார். குறிப்பாக இராமநாதபுரம் ஸ்வார்ட்ஸ் உயர்நிலைப்பள்ளியில் படித்ததை நினைவுபடுத்துகிறார் (ப.37). அங்கு அவருக்கு இருந்த ஒரே ஆறுதல் ஆசிரியர் அய்யாதுரை சாலமன். ஒளிவுமறைவில்லாத அணுகுமுறை, இதமாக செயல்பாடு, அவரவர் சுய மதிப்பை அறியவைத்தல் போன்றவற்றில் சிறந்தவர்.

அதைப் போலவே செயிண்ட் ஜோசப் கல்லூரியில் சேர்ந்த பின் டி.என்.செக்குரிரா, சின்னதுரை, கிருஷ்ண மூர்த்தி போன்றோர் அப்துல் கலாம் அணு விஞ்ஞானி ஆவதற்கான பாடங்களை அமைத்து அறிமுகப்படுத்தினர். ஜலாலுதீன், சம்சுதீன் ஆகியோரைப் போல சகோதரி ஜொஹராவை அடிக்கடி நினைவுகூறுகிறர். ஏனெனில் கலாமுக்கு பக்கபலமாக இருந்து ஒவ்வொரு தருணத்திலும் தன் நகைகளை அடகு வைத்து உதவியவர் அவர்தான். ஆனால் அவற்றை கலாம் மீட்டு தந்தாரா என்பதைப் பற்றி நூலினுள் குறிப்புகள் இல்லை. எம்.ஐ.டி.யில் சேர்ந்தபின் கலாமின் சிந்தனைகளைச் செம்மைப் படுத்தியவர்கள் மூன்று பேர். பேராசிரியர்கள் ஸ்பான்டர், கே.ஏ.வி.பண்டலை, நரசிங்கராவ் என்ற மும்மூர்த்திகளே அவர்கள். இவர்கள் வழங்கிய கருத்துகள் தான் அப்துல் கலாமின் பிந்தைய பணித்திட்டங்களுக்கு அடித்தளமாகும். மேற்கண்ட எல்லோரையும் நூலில் பல்வேறு இடங்களில் நன்றி கூறுகிறார் கலாம்.

### கலாமை பற்றிய தீர்க்க தரிசனம்

எம்.ஐ.டி.யில் இறுதியாண்டு விடைபெறு விழாவில் புகைப்பட எடுக்கும் போது மூன்றாவது

வரிசையில் நின்றிருந்த மாணவர் கலாமை பேராசிரியர் ஸ்பான்டர் முன்வரிசையில் அமர வைத்து "என்னுடைய தலைசிறந்த மாணவன் நீங்கள் எதிர்காலத்தில் உங்களுடைய ஆசிரியர்களுக்குப் புகழ் சேர்ப்பதற்கு கடும் உழைப்பு உங்களுக்கு துணைநிற்கும்....கடவுள் உங்களுடைய நம்பிக்கையாகவும் ஜீவனாகவும் உங்களுடைய வழிகாட்டியாகவும் இருந்து உங்களுடைய எதிர்காலத்தை நோக்கிய பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் ஒளி வழங்கட்டும் என்று எதிர்காலத்தில் அப்துல் கலாம் சிறந்து விளங்க வாய்ப்பு இருப்பதை முன் கூட்டியே கணித்து ஒரு தீர்க்க தரிசன ஆசியை வழங்கினார்.

## DTD & P (Air) பணி

எம்.ஐ.டி படிப்புக்குப் பின் 1958 இல் இரு வேறு பணிவாய்ப்புகள் காத்திருந்தன. டேராடூன் விமானப்படை அதிகாரி பணி மற்றொன்று பாதுகாப்பு அமைச்சகத்தின் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் உற்பத்தி (விமானம்) இயக்குநரகப் பணிவாய்ப்பு. இதில் அவரது நீண்ட நாள் ஆசையான வானில் பறக்க வேண்டும் என்பது நிராசையானது.

## அப்துல் கலாமின் சமயப் பார்வை

DTD & P நேர்முகத்தேர்வு எளிமையாகவே அமைந்தது. ஆனால் விமானப்படை நேர்முகத்தேர்வில் அவரது மனம் ஒரு நிலையில் இல்லை. எனவே நேர்முகத்தேர்வில் வெற்றிபெற முடியவில்லை. ஆகையால் இந்துக்களின் புனித தலமான ரிஷிகேசம் சென்று கங்கையில் நீராடினர். சாதுக்களை சந்தித்து தனது மனசஞ்சலத்தைப் போக்க நாடினார். சாது சுவாமி சிவானந்தர் கலாமுக்கு ஆசி கூறும்போது "மாணவன் தயாராகி விட்டால் ஆசான் வந்து விடுவார்...உன்னுடைய இருப்புக்கான நோக்கம் என்ன என்ற தேடலில் இறங்கு. உன்னுடைய சுயத்தோடு நீ ஒன்றுவிடு, என் மகனே! கடவுளின் விருப்பத்திற்கு உன்னை ஒப்படைத்து விடு" (ப.66) என்ற சுவாமியின் கருத்து கலாமிற்கு புதிய தெம்பைக் கொடுத்தது.

## உலக முன்னணி நாடுகளின் வரிசையில் இந்தியா

கலாம் இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் உயர் அணு மற்றும் ராக்கெட் நிறுவனங்களில் பணியாற்றியவர். DRDO, ISRO போன்றவற்றில் தம் வாழ்நாளில் பெரும் பகுதியை இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை விக்ரம் சாராபாய், பேராசிரியர் சதி தவான், டாக்டர் பிரம்ம பிரகாஷ் போன்ற மாபெரும் ஆளுமைகளுடன் பணியாற்றிய பெருமைக்குரியவர். தன் வரலாற்றெங்கும் அவர்களை பல இடங்களில் நினைவுகூறுகிறார். கலாம் தலைமையேற்ற முதல் திட்டமான எஸ்.எல்.வி திட்டம் கடலில் மூழ்கி தோல்வி அடைந்திருந்தாலும் முதல் சுதேசி ஏவுகணையான பிருத்வி, அக்னி ஏவுகணை, ஆகாஷ் ஏவுகணை, பொக்ரான் அணுகுண்டு சோதனை போன்ற இந்திய நாட்டை உலக அரங்கில் மேன்மையுற வைத்த செயல்திட்டங்களை வெற்றியடைய வைத்தவர். அதற்காக திருமணமே செய்துகொள்ளாது இந்திய விண்வெளி மற்றும் ராக்கெட் தொழில்நுட்பத்துறைக்கு மட்டுமே தன்னை அர்ப்பணித்து தனது பணியை மட்டுமே காதலித்து வந்தவர்.

## எளிய மக்களுக்கான தன் வரலாற்று ஆசிரியர்

இவ்வாழ்க்கை வரலாற்று நூலின் பெரும்பகுதி அணு-ராக்கெட்-செயற்கைக்கோள் துறை சார்ந்த கருத்துகளே இருந்தாலும் அவை எளிய மக்களை சென்றடைய வேண்டும் என்ற புரிதலோடு எழுதியுள்ளார். ஏனெனில் ஒவ்வொரு சாமனியனும் நவீன இந்தியாவின் விஞ்ஞானக் கட்டமைப்பின் ஏற்ற இறக்கங்களையும், இந்தியா தன்னை தொழில்நுட்ப முன்னணியில் நிறுத்திக் கொள்ளப் போராடி வருவதையும் விஞ்ஞான ரீதியில் தன்னிறைவு அடையவும் தொழில்நுட்ப ஆற்றலைப் பெறவும் களம் இறங்கியுள்ள இந்தியாவின் தேடல் யுகத்தின் நீதிக்கதை இது என்கிறார் கலாம் (ப.18). ஆகவே இந்நூலானது பல இளம் அப்துல்கலாம்களை உருவாக்கும் வல்லமை வாய்ந்தது என்று கூறின் மிகையில்லை.

மேலும் இந்நூல் எழுதப்பட்ட காரணத்தை, "இந்தப் பயணத்தின் உள்ளார்ந்த சில காட்சிகளைப்படம் பிடித்துக்காட்ட முயன்றிருக்கிறேன். இதனால் ஒரு சில இளைஞர்களாவது நமது சமூகத்தின் சட்டாம்பிள்ளைத்தனமான போக்கை எதிர்த்து நிற்கும் துணிவைப் பெறுவார்கள் என்று நம்புகிறேன்'' (ப.364) என்பதன் மூலம் இக்கருத்து வலுப்பெறுகிறது.

## இந்திய அமைப்புகளைப் பற்றிய கலாமின் பார்வை

இந்தியாவின் மிக உயர்ந்த பதவியான முதல் குடிமகன் எனும் அந்தஸ்துமிக்க பதவியில் இருந்தவர். ஆனால் இந்தியாவில் நிகழ்ந்த, நிகழ்ந்து வரும் சம்பவங்களை எதிர்மறைக் கண்கொண்டு நோக்காதவர். மாணவர்களிடமும் அவைகளிலும் பேசும் போது நேர்மறை சிந்தனைகளில் பேசும் எண்ணம் கொண்டவர். அவரே ஓரிடத்தில், ''தற்பெருமை பேசி தம்பட்டம் அடித்துக் கொள்ளும் சாபக்கேடு இந்திய அமைப்புகளை பரவலாகப் பீடித்துள்ளது. இதனால் நமது ஜீனியர்கள், சகாக்கள் நமக்குக் கீழே பணியாற்றுபவர்கள் என யார் என்ன சொன்னாலும் அதையெல்லாம் காது கொடுத்துக் கேட்பதில்லை. துரதிஷ்ட வசமாக நமது நாட்டில் இன்று ஹீரோக்கள் என்று ஒரே வித்தியாசம் தான் உள்ளது. ஒரு பக்கம் இருநூறு, முந்நூறு ஹீரோக்களின் ஆதிக்கம்! இன்னொரு பக்கம் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கும் 95 கோடி மக்கள்! இது மாற்றப்பட வேண்டிய நிலவரம்'', என்று இந்திய நிர்வாக, அரசியல் சீர்கேடுகளை கலாம் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது.

## இறுதியாக,

இந்த தன் வாழ்க்கை வரலாற்றிலக்கியத்தின் வாயிலாக நாம் அறிந்துகொள்வது என்னவெனில், டாக்டர் அப்துல்கலாம் தான் சாகும்வரை பள்ளி மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஒரு துடிப்புள்ள ஆசிரியராகவே 'கனவு காணுங்கள்' என்று சொன்னவர். தான் முதல் குடிமகனான பின்பு எளிமையின் வடிவமாகவே வாழ்ந்த பண்பாளர். தற்போது நாட்டின் பாதுகாப்பின் பின்னால் இருக்கின்ற ஏவுகணை தொழில்நுட்பத்திலும் ஒவ்வொரு மின்னணு கருவி வசதியின் இருக்கின்ற செயற்கைக்கோள் தொழில்நுட்பத்திலும் நவீன இந்திய பாதுகாப்பின் பிதாமகன் டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் நினைவுகூறுதல் சாலச்சிறந்தது.

## குறிப்புகள்:

1. சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம் ப.62
2. மேலது, ப.62
3. ச.சிவகாமி, தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம், ப.6
4. மேலது, ப.57